ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சுந்தரர் தேவாரத்தில் சிவவடிவங்கள்

**முனைவர். ப. தங்கத்துரைச்சி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்,**

**ஸ்ரீ பராசக்தி மகளிர்கல்லூரி(த)**

**குற்றாலம் – 627802.**

**மின்னஞ்சல் :jaithangam10@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்:**

சுந்தரர் தேவாரம் பன்னிரு திருமுறைகளில் ஏழாவதாக வைக்கப்பட்டுள்ளது. இத்திருமுறைகளில் உள்ள சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல்கள் தேவார பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆகையால் தேவாரம் குறித்த விளக்கம், ஏழாம்திருமுறை குறித்த செய்திகள், சிவ வழிபாடு பற்றிய தகவல்கள், சுந்தரர் தேவரத்தில் காட்டப்பட்டுள்ள சிவவடிவங்கள் போன்றவை இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை:**

உலகில் மனித இனம் தோன்றி வளர்ந்த காலகட்டத்தில் இயற்கையாக ஏற்படும் பருவ மாற்றங்களைக் கண்டு அஞ்சிய மனிதன், இயற்கையை வழிபடத் தொடங்கினான். மனித இனத்தின் பக்தி வழிபாடு என்பது இயற்கையை வழிபடுவதிலிருந்து தொடங்கியது எனலாம். இயற்கையாக எழும் ஓசையிலிருந்து இசையைக் கண்டறிந்தவன் அந்த இசையால் இறைவனை வணங்கினான். அடுத்து எழுத்துக்களை உருவாக்கி, அதனைச் சொற்களாக்கி, சொற்களைப் பாமாலைகளாக்கி, இறைவனுக்குச் சூட்டி மகிழ்ந்தான். பின் காலம் செல்ல செல்ல உலக அளவில் பல புதிய சமயங்கள் உருவாகின. அச்சமயங்களுக்கு என புனித நூல்கள் எழுந்தன. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் சைவ சமயத்தாரால் பெரிதும் போற்றபடுவது பன்னிரு திருமுறைகள்` ஆகும். இதில் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டிருப்பது சுந்தரரின் பாடல்களாகும். சுந்தரர் தேவாரத்தில் காணலாகும் சிவவடிவங்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**தேவாரம் – விளக்கம் :**

தே + வாரம் = தேவாரம். ‘தே’ என்பது தெய்வம் என்னும் பொருளைக் குறித்து வழங்கும் ஓரெழுத்து ஒரு மொழியாகும். ‘வாரம்’ என்பது இசையின் கூறுப்பாட்டினைக் குறித்து வழங்கும் சொல்லாகும். சொல் ஒழுங்கும் , இசை ஒழுங்கும் பொருந்திய பாடலை ‘வாரம்’ எனக் கூறலாம். ‘வாரம் பாடுதல்’ என்பது இசைப்பாடலில் கடவுளைப் போற்றி வழிபடுதல் என்ற பொருளில் கடைச்சங்க காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரிகிறது என்பர் கு. வைத்தியநாதன். (சைவ சமய வரலாறும் பன்னிரு திருமுறை வரலாறும். பக்கம். 14) எனவே ‘தேவாரம்’ என்பதை கடவுளுக்கு இசைப்பாக்களால்சூட்டப்பெறும்மாலைஎனக்கொள்வதுபொருத்தமுடையதாகும். ஆனாலும்கி.பி.1

ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் கல்வெட்டுகளில் 'தேவாரம்' என்ற சொல் 'வழிபாடு' என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்துள்ளது.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் , சுந்தரர் ஆகிய மூவர் பாடல்களும் பிற்காலத்தில் 'தேவாரம்' என்று வழங்கப் பட்டன. இம்மூவர் பாடல்களை 'தேவாரம் ' என்ற பெயருடன் முதன் முதலில் வழங்கியவர்கள் இரட்டைப் புலவர்கள். இதனை இவர்கள் பாடிய ஏகாம்பர நாதர் உலாவில்,

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்"
(ஏகாம்பர நாதருலா. பாடல் எண் :78)

என்ற பாடல் அடிகளில் குறித்திருப்பதன் வழி அறிந்து கொள்ள முடிகிறது. சோழர்கள் ஆட்சிக் காலத்தில் ' வழிபாடு' என்னும் பொருளில் ஆளப்பட்டு வந்த 'தேவாரம்' என்ற சொல்லானது, கி.பி.14ம் நூற்றாண்டிலிருந்து திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல்களுக்கு உரியதாக இன்று வரையிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

**ஏழாம் திருமுறை :**

பன்னிரு திருமுறைகளில் சுந்தரர் பதிகங்கள் ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இவருடைய பதிகங்கள் மொத்தம் நூறு ஆகும். ஓலைச் சுவடிகளில் இருந்த மூவர் பதிகங்களை முதற்குலோத்துங்கச் சோழன் காலத்தில் அவரது படைத்தலைவர்களுள் ஒருவரான மணவிற் கூத்தன் காலிங்கராயன் என்பவர் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லைத் திருக் கோயிலுள் பாதுகாத்து வைத்தார். இச்செய்தியை,

"முத்திறத்தா ரீசன் முதற்றிரத்தைப் பாடியவ
றெத் தழைத்த செப்பேட்டி
னுள்லெழுதி இத்தலத்தின்
எல்லைக் கிரிவாய் இசையெழுதினான் கூத்தன்
தில்லைச் சிற்ற ம்பலத்தே சென்று" என அக்கோயிலில்

பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் காணலாம்.என சைவசமயக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.(சைவ சமயக் களஞ்சியம் தொகுதி.3 பக்கங்கள் 19-20)

செப்பேடுகளில் இருந்த தேவாரப் பாடல்கள் கி.பி 1864ல் முதன் முதலாக அச்சு வடிவில் வெளிவந்தது.(சைவ சமய வரலாறும் பன்னிரு திருமுறை வரலாறும் பக்கம்.18)

**.சுந்தரரின் திருத்தொண்டத் தொகைப் பதிப்பகம்.**

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை என்னும் திருப் பதிப்பகம் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாகும். 63 நாயன்மார்கள் குறித்த வரலாற்றை இப்பதிகமே எடுத்துக் கூறுகிறது.சேக்கிழார் தன்னுடைய பெரிய புராணத்தை திருத்தொண்டத் தொகை பதிகத்தையே முதல்நூலகக் கொண்டு எழுதினார் என்பது வரலாறு.சோழர்கள் காலத்திலும் பாண்டியர்கள் காலத்திலும் 'திருத்தொண்டத்தொகை' பெயரில் மடங்கள் அமைத்திருந்ததை பல்வேறு கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன.

**சைவ சமய பொற்காலம்:**

கி.பி 7 முதல் கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தை சைவ சமயத்தின் பொற்காலம் என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.கி.பி. 7 முதல் 9ஆம் நூற்றாண்டு வரை பல்லவர்களும் அதற்குப்பின் சோழர்களும் தமிழ்நாட்டின் பெரும்பகுதியை ஆண்டு வந்தனர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தான் 'சைவ புண்ணியக் கண்கள்' என்று சேக்கிழார்.போற்றிய திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தமிழ்நாட்டில் அவதரித்தனர்.துறவற நெறிக்குள்ள சிறப்பு , இல்லற நெறிக்கும் உண்டு என்று இவ்விருவரும் மக்களிடையே எடுத்துக் கூறினர். ஆலமர் செல்வனாகத் துறவுக் கோலத்தில் இருக்கும் சிவபெருமான், பார்வதிதேவியை தன உடலில் பாதியாகக் கொண்டு அம்மையப்பராக இல்லற நெறியைப் போதிக்கும் வடிவில் இருக்கிறார் என்று தன் பாடல்கள் மூலம் மக்களிடம் எளிமையாக இனியதமிழில் எடுத்துக் கூறினார்.

இதனை

"பெண்ணின் நல்லளொடு பெருந்தொகை" (3-21-1)

(3ஆம் திருமுறை – 24ஆம் பதிகம் – 1ஆம் பாடல்)

என்று திருஞானசம்பந்தரும்,

"மறைக் காட்டுறையும் மணாளன்" (6-23-4)

(6ஆம் திருமுறை – 23ஆம் பதிகம் -4ஆம் பாடல்)

என்று திருநாவுக்கரசரும் தங்களுடைய பாடல்களில் காட்டுகின்றனர்.

**சிவ வழிபாடு.**

சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் வழிபடப்படுகிறார். அருவ வழிபாடு என்பது உருவமில்லாத வழிபாடாகும்.உருவ வழிபாடு என்பது உருவத்தை அதாவது தோற்றத்தை வழிபடுவதாகும்.அருவுருவ வழிபாடு என்பது உருவமும் உருவமில்லாத ஒரு உருவத்தை வழிபடுவதாகும்.இலிங்க வழிபாட்டை இதற்கு உதாரணமாகக் கூறலாம். சிவபெருமானை நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகிய ஐம்பூத வடிவிலும் வழிபடுவர். இவற்றுள் நிலமும், நீரும் உருவமுடையதாகும். ஆகாயமும், காற்றும் உருவமற்றதாகும். தீ அருவுருவமாகும் ஆனாலும் சிவன் அறுபத்து நான்கு வடிவங்களை உடையவர் என்று சைவ சமய நூல்கள் குறிப்பிடுகின்றன.


**சுந்தரர் தேவாரத்தில் சிவவடிவங்கள்.**

வடமொழியில் கேசி முனிவரால் எழுதப்பட்ட 'அஷ்டாஷ்டக விக்கிரக லீலை' என்ற நூல் சிவபெருமானின் 64 வடிவங்களை வரையறுத்துக் கூறுகிறது. தமிழில் ஈக்காடு இரத்தினவேலு முதலியாரால் 1908ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'சிவபராக்கிரமம்' என்னும் நூலில் இந்த 64 சிவபடிவங்களின் ஓவியங்களும் அவை பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. கந்தபுராணம் சிவபெருமானின் 25 வடிவங்களைக் குறிப்பிடுகிறது. இந்த 25 வடிவங்களை மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கொடிமரத்திற்கு அருகில் சிற்ப வடிவில் காணலாம்.

சுந்தரர் காலத்திற்குப் பின்னர்தான் கோயில் கட்டிடக்கலை சோழர்கள் காலத்தில் உன்னத நிலையை அடைந்தது எனலாம். சோழர்கள் அவர்கள் அமைத்த கோயில்களில் சிற்பங்களை ஓவியங்களை அமைக்கும்போது அதற்குத் தேவாரப் பாடல்களையே மூலமாகக் கொண்டு அமைத்தனர். கல்வெட்டு ஆராய்ச்சியாளர் குடவாயில் பாலசுப்ரமணியன், திருஞானசம்பந்தர்,

திருநாவுக்கரசர் ஆகியோர் ஏழாம் நூற்றாண்டிலும், சுந்தரர் எட்டாம் நூற்றாண்டிலும் தம் பனுவல்களில் காட்டிய புராணக் காட்சிகளை பதினோராம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் தஞ்சை கோயிலில் சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் காண முடிகிறது.(இராஜராஜேச்சரம் பக்கம்: (28) என்று குறிப்பிட்டுள்ளமை மேற்கண்ட கருத்துக்கு வலுச் சேர்க்கிறது.

**இலிங்க மூர்த்தி**



இலிங்க வடிவில் சிவபெருமான் காட்சியளிப்பது இலிங்க மூர்த்தியின் வடிவமாகும். இவ்வடிவத்தினை அகத்தியர் பொதிகைமலையில் இலிங்க உருவம் செய்து வழிபட்டார்,
எனக் குறித்துள்ளார் சுந்தரர். இதனை

" சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச்
சகளி செய்திறை சகத்தியன் தனக்கு" (7-65-5)
(7ஆம் திருமுறை 65ஆம் பதிகம். 5ஆம் பாடல்.)

என்ற பாடலில் காட்டுகிறார். சகளம் என்பது – இலிங்கம்.

**லிங்கோற்ப மூர்த்தி**



சோதி வடிவமான சிவ பெருமானை பிரம்மனும் திருமாலும் முறையே அன்னமும் பன்றியுமாய் மாறி முடியையும் அடியையும் தேடி நிற்கும் வடிம் லிங்கோற்பவ மூர்த்தியாகும். இவ்வடிவினைச் சுந்தரர்.

1. “ஏனமோடு அன்னம் எங்கும் நாடியும் காண்பரியானை” (4-68-5)
2. “மாலயன் காண்பரியான்” (7-56-6)
3. “அயனும் மாலும் நணுகா வண்ணம் அனலுமாய பெருமான்” (7-6-9)

என்று தன் பாடல்களில் குறித்துள்ளார்.



**உமாமகேசுவரமூர்த்தி:**

சிவபெருமானும் உமா தேவியும் இணைந்து அமர்ந்த தோற்றம் உமாமகேசுவர மூர்த்தியாகும். இதனை

“பாலன மென்மொழியாள் பாவையோடும் உடனே” (7-85-9) என்று காட்டுகிறார் சுந்தரர்.

**சந்திரசேகர மூர்த்தி**



பிறைச் சந்திரனை முடியில் தரித்த கோலத்தில் சிவபெருமான் வீற்றிருக்கும் தோற்றம் சந்திரசேகர மூர்த்தியாகும்.

1. “நிலவெண்மதி சூடிய நின்மலனே” (7-3-1)

2. " இந்து சேகரன்" ( 7-70-5)
3. "கோணல் மாமதி சூடியவர்" (7-33-5)
4. மஞ்சுண்ட மாலைமா சூடியவன்" (7-2-4)

அன்று அழகான சொற்சித்திரத்தில் காட்டியுள்ளார் சுந்தரர்.

**விடையேறிய பெருமான்**



சிவபெருமான் காளை வாகனத்தின் மீது காட்சியளிக்கும் தோற்றம் விடையேறிய பெருமான் வடிவமாகும். இதனை,

1. "ஊர்வதோர் விடை ஒன்றுடையான்" (7-56-1)
2. "பெற்றம் ஊர்தி " (7-89-1)
3. "எருதேரும் பெருமான்" (7-38-10)

என்று காட்டுகிறார் சுந்தரர்.

**முடிக்கங்கையை விடுவிக்கும் பெருமான்**



கங்கையைத் தன் சடையில் தாங்கி பிறகு அதில் சிறு பகுதியை நிலத்தின் மீது விடுவித்த சிவபெருமானின் வடிவம் இதுவாகும்.

“ பகீரதன் வேண்ட ஆர்த்து வந்து இழியும் புனல் கங்கை “ (7-55-7)

என்று இவ்வடிவினைச் சுட்டியுள்ளார் சுந்தரர்.

இவ்வடிவத்தை ஆடுதுறை, மயிலாடுதுறை, திருக்கடவூர் முதலிய ஊர்களில் உள்ள சிவாலயங்களில் காணலாம்.

**அர்த்த நாரிசுவரமூர்த்தி:**



சிவபெருமானின் இடப்பக்கத்தில் பாதி அம்பிகையின் உருவமாகத் தோற்றமளிப்பது அர்த்த நாரிசுவரமூர்த்தி வடிவமாகும்.

1. “ ஆணோடு பெண்ணாம் உருவாகி நின்றாய்” (7-3-9)
2. “மாதோர் பாகமாக” (7-6-5)
3. “குழலை வென்ற மொளிமடவாளை ஓர் கூறனாம்” (7-12-5)

என்று தன் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார் சுந்தரர்.

இவ்வாறு சிவனுக்குரிய வடிவங்களாகக் கூறப்பட்டுள்ள 64வடிவங்களில் 53வடிவங்களைச் சுந்தரர் தேவாரத்தில் காணமுடிகிறது. இவற்றுள் அர்த்த நாரிசுவரமமூர்த்தி வடிவத்தை தன் பாடல்களில் அதிக அளவில் சுட்டிக் காட்டியுள்ளார் சுந்தரர்.

**முடிவுரை:**

திருமுறைகளில் ஏழாவதாக வைக்கப்பட்டுள்ள சுந்தரர் தேவாரம் சிறப்பு வாய்ந்ததாகும். சேக்கிழார் பெரிய புராணத்தை எழுதுவதற்கு சுந்தரருடைய பதிகங்களே காரணமாக இருந்திருக்கிறது. மேலும் சோழர்கள் காலத்தில் கோயில்கள் அமைக்கும் பொழுது அங்கு பல்வேறு வகையான சிற்பங்களை அமைப்பதற்கு தேவாரப் பாடல்களே உதவியாக இருந்துள்ளன. இதனைப் பல்வேறு தேவாரப் பாடல்கள் உறுதி செய்கின்றன. சுந்தரருடைய தேவாரத்தில் 64 வடிவங்களில் 53 வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வடிவங்கள் குறித்து விரிவாக ஆராயலாம்.

**துணை நூற்பட்டியல் :**

1. 1. அருணை வடிவேல் முதலியார். சி 1964 : சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள். தருமைஆதின வெளியீடு.
2. 2. செல்வகணபதி. இ.ரா. 2013: சைவ சமயக் களஞ்சியம் தொகுதி – 3 தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை சென்னை.
3. 3. வேங்கடராமையர் 1964: கல்வெட்டில் தேவார மூவர் சோமு புத்தக நிலையம், மதுரை.
4. 4. வைத்தியநாதன். கு 1995: சைவ சமய வரலாறும் பன்னிருதிருமுறை வரலாறும் திருவாடுதுறை ஆதின வேளியீடு.